தமிழ் நாடு சட்ட மன்ற மேலவை.

சனிக்கிழமை, 1981 மார்ச் 7.

மாசி 24, ரௌத்திரி 2012—திருவள்ளுவராண்டு.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் முற்பகல் 10-30 மணியளவில் மாண்புமிகு மேலவைத் தலைவர் (டாக்டர் ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

1. வினாக்கள்-விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

உடற்பயிற்சி ஆசிரியர்களுக்கு சலவைப் படி.

*121 வினா.—திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் மற்றும் செல்வி அ. லீலாவதி : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறோம்—

(அ) பள்ளிகளில் உடற்பயிற்சி ஆசிரியர்களுக்கு, சீருடைகளை சலவை செய்து கொள்ள, சலவைப் படி (Washing allowance) வழங்கப் படுகிறதா ?

(இ) இல்லையெனில், அதனை வழங்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) இல்லை.

(இ) இதுபற்றிய கோரிக்கை அரசுக்கு வந்தால் அரசு இதனைப் பரிசீலிக்கும்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : இது சம்பந்தமான கோரிக்கை முன்பே அதிகாரிகளிடத்தில் எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. பள்ளிக்கூடங்களில் இருக்கிற என்.சி.சி. பயிற்சி ஆசிரியர்களுக்கு சீருடைகளைச் சலவை செய்துக் கொள்ள சலவைப் படி என்று வழங்கப்படுகிறது. அதனுடைய அவசியம் மாண்புமிகு அமைச்சரவர்களுக்கு நன்றாகத் தெரியும். ஆகவே இந்த மன்றத்திலே இப்போது சொல்வதையே கோரிக்கையாக வைத்துக் கொண்டு, மாண்புமிகு அமைச்சரவர்கள் உடற்பயிற்சிக் கல்வி ஆசிரியர்களுக்கு சீருடைகளைச் சலவை செய்துகொள்ள சலவைப் படி கொடுக்க நல்லதொரு முடிவு செய்வார்களா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அதுபற்றி அரசு பரிசிலிக்கும்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : உடற்பயிற்சி ஆசிரியர்களுக்கு சீருடைகள் வழங்குவதற்காக பள்ளிக்கூட விளையாட்டு நிதியிலிருந்து பணம் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. பல பள்ளிகளில் விளையாட்டு நிதி குறைவாக இருக்கிறது. மாணவர்களின் நிதியிலிருந்து இதை எடுத்துக் கொள்ளும் காரணத்தால், ஆசிரியர்கள் தங்கள் நிதியிலிருந்து உடை உடுத்துகிறார்களென்று மாணவர்கள் எண்ணும் சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. இது ஆசிரியர்களின் தன்மானத்தைப் பாதிக்கிறது. எனவே அரசு நிதியிலிருந்தே சீருடை வழங்க ஆவன செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : கேம்ஸ் ஃபண்ட்-ல் பணம் இல்லையென்றால், அமெனிட்டி ஃபண்ட்-லிருந்து எடுத்துக்கொள்ளலாமென்று குறைவாக விளையாட்டு நிதி உள்ள பள்ளிகளுக்கு அனுமதி தந்திருக்கிறோம்.

திரு. பா. ரா. தாமஸ் : சீருடைக்காக வழங்கப்படும் தொகை மிகவும் குறைவாக இருக்கிறது. அதாவது 50 ரூபாய் என்று இருக்கிறது. ஐம்பது ரூபாய்க்குச் சீருடை தைக்க இயலாத நிலையிலே, அதைச் சற்று உயர்த்தித் தர அமைச்சரவர்கள் ஆணை பிறப்பிப்பார்களா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இப்போது இதைப்பற்றிப் பரிசீலிக்கின்ற உத்தேசமில்லை.

Law University

* 122 *Q.*—THIRU P. R. THOMAS (on behalf of THIRU D. SANTOSHAM): Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether there is any proposal to start a Law University similar to the Agricultural University, affiliating to itself, all the Law Colleges in the State; and

(b) if so, the stage at which the matter now stands ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) வேளாண்மைப் பல்கலைக் கழகத்தைப் போல, மாநிலத்திலுள்ள அனைத்துச் சட்டக் கல்லூரிகளையும் இணைத்து ஒரு சட்டப் பல்கலைக் கழகம் நிறுவும் முனைவு தற்போது பரிசீலனையில் இல்லை.

(ஆ) இந்தக் கேள்விக்கு இடமில்லை.